DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/17 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | பவுனம்மாள் **PW - 21** |
| Father's Name | ராமன் |
| Village | நெகலூர் புதுார் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 75 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/01/2021

முதல் விசாரணை

அ.சா.1 சக்திவேல் எனது மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்துபோன ராமன் எனது கணவர். எனது கணவர் உடல்நலம் சரியில்லாமல் இறந்து விட்டார். பிரச்சனையை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

கடந்த 10.06.2016ம் தேதி மாலை 05.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் குப்பன், கஸ்தூரி, ஞானமூர்த்தி, மலர்விழி, முருகன் ஆகியோர்கள் தடி மற்றும் கத்தியுடன் எனது வீட்டிற்கு வந்து ராமன், சக்திவேல், மாரியம்மாள், சங்கரி, கலைமணி, குணசுந்தரி, ஆகியோருடன் வீட்டிலிருந்தபோது மேற்படி நபர்கள் வீட்டின் பின்புறம் வழியாக வந்தார்கள் என்றும், எனது கணவரை அசிங்கமாக திட்டி, குப்பனின் மருமகன் முருகன் இதோடு

ஒழிந்துபோடா என சொல்லி தலையிலும் வலது மார்பிலும் குத்தினார்கள் என்றும், அப்போது மறிக்கவந்த சக்திவேலுவை குப்பன் முருகனிடம் இருந்த கத்தியை பிடிங்கி இதோடு ஒழிந்துபோடா என்றும், நாங்கள் இருவரும் ரத்த வெள்ளத்தில் சாய்ந்து விட்டோம் என்றும், அப்போது வீட்டின் பின்பக்கமாக ஞானமூர்த்தி, கஸ்துாரி, மலர்விழி, சங்கரி, ஆகியோர்கள் வீட்டினுள் நுழைந்து துடுப்பை எடுத்து எனது கணவரின் மேல் அடித்தார்கள் என்றும், தடுக்க வந்த மாரியம்மாவை தாக்கினார்கள் என்றும், குப்பன் தான் வைத்திருந்த கத்தியால், கலைமணியை முன் நெற்றியிலும், குணசுந்தரியையும் பின் மண்டையில் வெட்டினார் என்றும், ஞானமூர்த்தி சங்கரியின் பின் மண்டையில் வெட்டினார் என்றும், நாங்கள் அனைவரும் ரத்த வெள்ளத்திலும் துடித்த அலரியபோது சத்தம்கேட்டு காண்டிபன், கோகுல்ராஜ், சேகர், ஆகியோர்கள் வருவதை கண்ட எதிரிகள் அவர்களை பார்த்து திட்டி கொண்டு, எங்களிடம் பிரச்சனை செய்தால், உங்களை உயிரோடு வாழ விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், நான் பயந்து ஓடி ஒலிந்து கொண்டேன் என்றும், மேற்படி காண்டீபன், கோகுல், சேகர் ஆகியோர்கள், ஓடிவந்து எனது கணவர், சக்திவேல், மருமகன் மாரியம்மாள், பேத்திகள் சங்கரி, கலைவாணி, குணசுந்தரி ஆகியோரை 108 ஆம்புலன்சு மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், எனது கணவர் ராமனும் சக்திவேலும், மேல்சிகிச்சைக்கு முண்டியம்பாக்கம் சென்று சிகிச்சை பெற்றுவிட்டு 14.06.2016ம் தேதி திரும்ப வீட்டிற்கு வந்தார்கள் என்றும், 16.06.2016ம் தேதி தனது கணவருக்கு உடல்நிலை குறைவு ஏற்பட்டு கவலைக்கிடமாக சக்கரை நோய் பாதிப்பால் 24.06.2016ம் தேதி பாண்டிச்சேரி மகாத்மா மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள் என்றும், அங்கே தனது கணவரை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கே சிகிச்சை பலனின்றி 27.06.2016ம் தேதி எனது கணவர் இறந்து விட்டார் என்றும், எனது கணவரை குப்பன், கஸ்துாரி, மலர்விழி, முருகன், ஆகியோர்கள் கொடூரமாக தாக்கியதால் இறந்துவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்சமயம் எதிரிகளை காப்பாற்றி வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/17 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | சகாதேவன் **PW - 22** |
| Father's Name | பெருமாள் |
| Village | நெகனூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/01/2021

முதல் விசாரணை

நான் தற்போது எலக்ட்ரானிக்ஸ் கம்பனி வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 11.06.2016ம் தேதி நான் பேங்களூரில் இருந்தேன். நான் சம்பவ தேதியில் ஊரில் இல்லை, பேங்களூரில் தான் இருந்தேன். போலிசார் சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் பபற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனது சித்தாப்பா சொல்லி கேள்விபட்டேன்.

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

10.06.2016ம் தேதி மாலை 05.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சார்ந்த செந்தில், ருத்திரகுமார் ஆகியோர்கள் எங்கள் ஊர் தூக்குமேடை அருகே உட்கார்ந்திருந்தோம் என்றும், அப்போது குப்பன், குப்பன் மனைவி கஸ்தூரி, மகன் ஞானமூர்த்தி, மகள் மலர்விழி, மருமகன் முருகன் ஆகியோர்கள் சக்திவேல் வீட்டை நோக்கி சென்றார்கள் என்றும், முருகன் கையில் கத்தியும், குப்பன் தடியும், வைத்திருந்தார் என்றும்,

இவர்களுக்குள் அடிக்கடி வாய்தகராறும், ஒருவரை ஒருவர் அடிக்கடி தாக்கி கொள்வதால் நாங்கள் அதை பொருட்படுத்தவில்லை என்றும், குப்பன் குடும்பத்தினர் சக்திவேலின் வீட்டிற்கு சென்ற சிறிது நேரத்தில் கூக்குரலும், அலரல் சத்தமும், எனக்கு கேட்டது என்றும், நாங்கள் உடனே சக்திவேலின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ராமன், சக்திவேல், சங்கரி, கலைமணி, குணசுந்தரி, ஆகியோர்கள் ரத்த வெள்ளத்தில் மாரியம்மாள், தலையில் பலத்த அடிப்பட்ட அனைவரும் மயக்க நிலையில் இருந்தார்கள் என்றும், வீடு முழுவதும் ரத்தம் சிதறிக்கிடந்தது என்றும், நாங்கள் வருவதை கண்ட குப்பன் தரப்பினர் அங்கிருந்து வேகமாக சென்று விட்டார் என்றும், மேற்படி காயம் பட்டவர்களை நாங்கள் 108 ஆம்புலன்சு மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், இது சம்பந்தமாக போலிசார் எங்களை விசாரணை செய்தார் என்றும், தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற வேண்டி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.